# Isa

## Chapter 19

Tamil Interlinear

Reference: Tamil Indian Revised Version (IRV)

1

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| קַל | עָב | עַל־ | רֹכֵב | יְהוָה | הִנֵּה | מִצְרָיִם | מַשָּׂא |
| வேகமான | மேகத்தின் | -மீது | ஏறுகிறார் | யெகோவா | இதோ | எகிப்தின் | தீர்க்கவசனம் |
| H7031 | H5645 | | H7392 | H3068 | H2009 | H4714 | |

| | | | | |
|---|---|---|---|---|
| מִצְרַיִם | אֱלִילֵי | וְנָעוּ | מִצְרַיִם | וּבָא |
| எகிப்தின் | விக்கிரகங்கள் | -மற்றும்-நடுங்கும் | எகிப்துக்கு | -மற்றும்-வருகிறார் |
| H4714 | H0457 | H5128 | H4714 | H0935 |

| | | | | |
|---|---|---|---|---|
| בְּקִרְבּוֹ׃ | יִמַּס | מִצְרַיִם | וּלְבַב | מִפָּנָיו |
| அதன்-நடுவில் | உருகும் | எகிப்தின் | -மற்றும்-இருதயம் | அவர்-முன்னிலிருந்து |
| H7130 | H4549 | H4714 | H3824 | H6440 |

> எகிப்தைக் குறித்த செய்தி. இதோ, யெகோவா வேகமான மேகத்தின்மேல் ஏறி எகிப்திற்கு வருவார்; அப்பொழுது எகிப்தின் சிலைகள் அவருக்கு முன்பாகக் குலுங்கும், எகிப்தின் இருதயம் தனக்குள்ளே கரைந்து போகும்.

2

| | | | | |
|---|---|---|---|---|
| אִישׁ־ | וְנִלְחֲמוּ | בְּמִצְרַיִם | מִצְרַיִם | וְסִכְסַכְתִּי |
| மனிதன் | -மற்றும்-போரிடுவார்கள் | எகிப்தில் | எகிப்தை | -மற்றும்-கலக்கவைப்பேன் |
| H0376 | | H4714 | H4714 | |

| | | | | |
|---|---|---|---|---|
| בְּעִיר | עִיר | בְּרֵעֵהוּ | וְאִישׁ | בְּאָחִיו |
| நகரத்தோடு | நகரம் | அவன்-அயலானோடு | -மற்றும்-மனிதன் | அவன்-சகோதரனோடு |
| | | H7453 | H0376 | H0251 |

| | |
|---|---|
| בְּמַמְלָכָה׃ | מַמְלָכָה |
| ராஜ்யத்தோடு | ராஜ்யம் |
| H4467 | H4467 |

> சகோதரனுடன் சகோதரனும், சிநேகிதனுடன் சிநேகிதனும், பட்டணத்துடன் பட்டணமும், தேசத்துடன் தேசமும் போர்செய்வதற்காக, எகிப்தியரை எகிப்தியருடன் போரிட வைப்பேன்.

3

| | | | |
|---|---|---|---|
| בְּקִרְבּוֹ | מִצְרַיִם | רוּחַ־ | וְנָבְקָה |
| அதன்-நடுவில் | எகிப்தின் | ஆவி | -மற்றும்-வறண்டுபோகும் |
| H7130 | H4714 | H7307 | |

| | | | |
|---|---|---|---|
| אֶל־ | וְדָרְשׁוּ | אֲבַלֵּעַ | וַעֲצָתוֹ |
| -க்கு | -மற்றும்-தேடுவார்கள் | விழுங்குவேன் | -மற்றும்-அதன்-ஆலோசனையை |
| H0413 | H1875 | H1104 | H6098 |

| | | | |
|---|---|---|---|
| וְאֶל־ | הָאִטִּים | וְאֶל־ | הָאֱלִילִים |
| -மற்றும்-க்கு | -அந்த-மந்திரவாதிகளை | -மற்றும்-க்கு | -அந்த-விக்கிரகங்களை |
| H0413 | | H0413 | H0457 |

| | | |
|---|---|---|
| הַיִּדְּעֹנִים׃ | וְאֶל־ | הָאֹבוֹת |
| -அந்த-குறிசொல்பவர்களை | -மற்றும்-க்கு | -அந்த-ஓப்களை |
| H3049 | H0413 | H0178 |

> அதினால் எகிப்தியருடைய ஆவி அவர்களுக்குள் சோர்ந்துபோகும்; அவர்கள் ஆலோசனையை அழிந்துபோகச்செய்வேன்; அப்பொழுது சிலைகளையும், மந்திரவாதிகளையும், இறந்தவர்களிடம் பேசுகிறவர்களையும், குறிசொல்கிறவர்களையும் தேடுவார்கள்.

4 וְסִכַּרְתִּי -மற்றும்-அடைப்பேன் H5534 | אֶת־ -ஐ H0853 | מִצְרַיִם எகிப்தை H4714 | בְּיַד கையில் H3027 | אֲדֹנִים ஆண்டவர்களின் H0113 | קָשֶׁה கடினமான H7186

וּמֶלֶךְ -மற்றும்-அரசன் H4428 | עַז வலிமையான H5794 | יִמְשָׁל־ ஆளுவான் H4910 | בָּם அவர்களை | נְאֻם அறிக்கை H5002 | הָאָדוֹן -அந்த-ஆண்டவரின் H0113

יְהוָה யெகோவா H3068 | צְבָאוֹת׃ சேனைகளின்

> நான் எகிப்தியரைக் கடினமான அதிபதியின் கையில் ஒப்புவிப்பேன்; கொடூரமான ராஜா அவர்களை ஆளுவான் என்று சேனைகளின் யெகோவாவாகிய ஆண்டவர் சொல்கிறார்.

5 וְנִשְּׁתוּ־ -மற்றும்-வறண்டுபோகும் H3001 | מַיִם தண்ணீர்கள் H4325 | מֵהַיָּם கடலிலிருந்து H3220 | וְנָהָר -மற்றும்-நதி H5104 | יֶחֱרַב வறண்டுபோகும்

וְיָבֵשׁ׃ -மற்றும்-உலரும் H5405

> அப்பொழுது கடலின் தண்ணீர்கள் குறைந்து, நதியும் வற்றி வறண்டுபோகும்.

6 וְהֶאֶזְנִיחוּ -மற்றும்-நாற்றம்-கொடுக்கும் | נְהָרוֹת நதிகள் H5104 | דָּלְלוּ குறைந்தன H1809 | וְחָרְבוּ -மற்றும்-வறண்டன | יְאֹרֵי கால்வாய்கள் H2975

מָצוֹר எகிப்தின் H4693 | קָנֶה நாணல் H7070 | וָסוּף -மற்றும்-நாணல்புல் H5488 | קָמֵלוּ׃ கருகின H7060

> ஆறுகளைத் திருப்பிவிடுவார்கள்; பாதுகாப்பான அகழிகள் வெறுமையாகி வறண்டுபோகும்; கோரையும் நாணலும் வாடும்.

7 עָרוֹת வெற்று-நிலங்கள் H6169 | עַל־ -மீது | יְאוֹר நைலின் H2975 | עַל־ -மீது | פִּי வாயின் H6310 | יְאוֹר நைலின் H2975 | וְכֹל -மற்றும்-எல்லா H3605

מִזְרַע விதைத்தது H4218 | יְאוֹר நைலின் H2975 | יִיבַשׁ உலரும் H3001 | נִדַּף தூண்டப்படும் H5086 | וְאֵינֶנּוּ׃ -மற்றும்-இல்லையாகும் H0369

> நதியோரத்திலும் நதிமுகத்திலும் இருக்கிற இலையுள்ள செடிகளும், நதியருகில் விதைக்கப்பட்ட யாவும் உலர்ந்துபோகும்; அது பறக்கடிக்கப்பட்டு இல்லாமல்போகும்.

8 וְאָנוּ -மற்றும்-புலம்புவார்கள் H0578 | הַדַּיָּגִים -அந்த-மீனபிடிப்பவர்கள் H1771 | וְאָבְלוּ -மற்றும்-துயர்ந்தார்கள் H0056 | כָּל־ எல்லா H3605

מַשְׁלִיכֵי எறிபவர்கள் H7993 | בַיְאוֹר நைலில் H2975 | חַכָּה தூண்டிலை H2443 | וּפֹרְשֵׂי -மற்றும்-விரிப்பவர்கள் H6566 | מִכְמֹרֶת வலையை | עַל־ -மீது | פְּנֵי־ முகத்தில் H6440

מַיִם தண்ணீரின் H4325 | אֻמְלָלוּ׃ வாடினார்கள் H0535

> மீன்பிடிக்கிறவர்கள் பெருமூச்சுவிடுவார்கள், நதியிலே தூண்டில்போடுகிற அனைவரும் துக்கப்படுவார்கள்; தண்ணீர்களின்மேல் வலைகளை வீசுகிறவர்கள் சலித்துப்போவார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| שְׂרִיקוֹת | פִּשְׁתִּים | עֹבְדֵי | וּבֹשׁוּ | 9 |
| நுட்பமான | சணலின் | வேலையாளர்கள் | -மற்றும்-வெட்கப்படுவார்கள் | |
| H8305 | H6593 | H5647 | H0954 | |

| | |
|---|---|
| חוֹרָי׃ | וְאֹרְגִים |
| வெண்மைத்-துணியின் | -மற்றும்-நேய்பவர்கள் |
| H2355 | H0707 |

> மெல்லிய சணலைப் பக்குவப்படுத்துகிறவர்களும், மெல்லிய ஆடைகளை நெய்கிறவர்களும் வெட்கப்படுவார்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| שָׂכֶר | עֹשֵׂי | כָּל־ | מְדֻכָּאִים | שָׁתֹתֶיהָ | וְהָיוּ | 10 |
| கூலியை | செய்பவர்கள் | எல்லா | நசுக்கப்பட்ட | அதன்-அஸ்திவாரங்கள் | -மற்றும்-ஆகும் | |
| H7938 | | H3605 | H1792 | H8356 | H1961 | |

| | |
|---|---|
| נָפֶשׁ׃ | אַגְמֵי־ |
| ஆத்துமாவின் | குளங்களாக |
| H5315 | H0099 |

> மீன் வளர்க்கிற குளங்களுக்கு கூலிக்கு அணை கட்டுகிற அனைவருடைய அணைக்கட்டுகளும் உடைந்துபோகும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| פַּרְעֹה | יֹעֲצֵי | חַכְמֵי | צֹעַן | שָׂרֵי | אֱוִלִים | אַךְ־ | 11 |
| பாரோவின் | ஆலோசகர்கள் | ஞானிகள் | சோவானின் | பிரபுக்கள் | மூடர்கள் | நிச்சயமாக | |
| H6547 | H6098 | H2450 | H6814 | H8269 | H0191 | H0389 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| בֶּן־ | פַּרְעֹה | אֶל־ | תֹּאמְרוּ | אֵיךְ | נִבְעָרָה | עֵצָה |
| மகன் | பாரோவிற்கு | -க்கு | சொல்வீர்கள் | எப்படி | மூடத்தனமான | ஆலோசனை |
| | H6547 | H0413 | H0559 | | | H6098 |

| | | | | |
|---|---|---|---|---|
| קֶדֶם׃ | מַלְכֵי־ | בֶּן־ | אֲנִי | חֲכָמִים |
| பண்டையின் | அரசர்களின் | மகன் | நான் | ஞானிகளின் |
| | H4428 | | H0589 | H2450 |

> சோவான் பட்டணத்தின் பிரபுக்களாக இருப்பவர்கள் மூடர்கள்; பார்வோனுடைய ஞானமுள்ள ஆலோசனைக்காரரின் ஆலோசனை மதியீனமானது: நான் ஞானிகளின் மகன், நான் முந்தின ராஜாக்களின் மகன் என்று பார்வோனிடம் எப்படிச் சொல்கிறீர்கள்?

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| לָךְ | נָא | וְיַגִּידוּ | חֲכָמֶיךָ | אֵפוֹא | אַיָּם | 12 |
| உனக்கு | தயவுசெய்து | -மற்றும்-தெரிவிப்பார்களாக | உன்-ஞானிகள் | ஆகையால் | எங்கே | |
| | H4994 | H5046 | H2450 | H0645 | H0335 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| מִצְרָיִם׃ | עַל־ | צְבָאוֹת | יְהוָה | יָעַץ | מַה־ | וְיֵדְעוּ |
| எகிப்தை | -மீது | சேனைகளின் | யெகோவா | ஆலோசித்தார் | என்ன | -மற்றும்-அறிவார்களாக |
| H4714 | | | H3068 | H3289 | H4100 | H3045 |

> அவர்கள் எங்கே? உன் ஞானிகள் எங்கே? சேனைகளின் யெகோவா எகிப்தைக்குறித்துச்செய்த யோசனையை அவர்கள் உனக்குத் தெரிவிக்கட்டும்; அல்லது தாங்களே அறிந்துகொள்ளட்டும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| נֹף | שָׂרֵי | נִשְּׁאוּ | צֹעַן | שָׂרֵי | נוֹאֲלוּ | 13 |
| நோபின் | பிரபுக்கள் | ஏமாந்தார்கள் | சோவானின் | பிரபுக்கள் | மூடரானார்கள் | |
| H5297 | H8269 | H5377 | H6814 | H8269 | H2973 | |

| | | | | |
|---|---|---|---|---|
| שְׁבָטֶיהָ׃ | פִּנַּת | מִצְרַיִם | אֶת־ | הִתְעוּ |
| அதன்-கோத்திரங்களின் | மூலைக்கல் | எகிப்தை | -ஐ | வழிதவறுசெய்தார்கள் |
| H7626 | H6438 | H4714 | H0853 | H8582 |

> சோவான் பிரபுக்கள் மூடரானார்கள்; நோப்பு பட்டணத்தின் பிரபுக்கள் மோசம்போனார்கள்; எகிப்தையும் அதின் கோத்திரத்தலைவரையும் வழிதப்பச்செய்கிறார்கள்.

14
יְהוָ֛ה யெகோவா H3068
מָסַ֥ךְ கலந்தார் H4537
בְּקִרְבָּ֖הּ அதன்-நடுவில் H7130
ר֣וּחַ ஆவியை H7307
עִוְעִ֑ים குழப்பத்தின் H5773

וְהִתְע֤וּ -மற்றும்-வழிதவறுசெய்தார்கள் H8582
אֶת־ -ஐ H0853
מִצְרַ֙יִם֙ எகிப்தை H4714
בְּכָל־ எல்லா H3605
מַעֲשֵׂ֔הוּ அவன்-செயலில் H4639
כְּהִתָּע֥וֹת தள்ளாடும்-போல H8582

שִׁכּ֖וֹר குடியனின் H7910
בְּקִיאֽוֹ׃ அவன்-வாந்தியில்

> யெகோவா அதின் நடுவில் தாறுமாறுகளின் ஆவியை வரச்செய்தார்; குடிவெறியன் வாந்தியெடுத்து, தள்ளாடித் திரிகிறதுபோல, அவர்கள் எகிப்தை அதின் எல்லாச்செய்கையிலும் தள்ளாடித் திரியச்செய்கிறார்கள்.

15
וְלֹֽא־ -மற்றும்-இல்லை H3808
יִהְיֶ֥ה ஆகும் H1961
לְמִצְרַ֖יִם எகிப்துக்கு H4714
מַעֲשֶׂ֑ה செயல் H4639
אֲשֶׁ֧ר -அது
יַעֲשֶׂ֛ה செய்யும்
רֹ֥אשׁ தலை
וְזָנָ֖ב -மற்றும்-வால் H2180

כִּפָּ֥ה கிளை H3712
וְאַגְמֽוֹן׃ -மற்றும்-நாணல்புல் H0100
ס —

> எகிப்தில் தலையாகிலும், வாலாகிலும், கிளையாகிலும், நாணலாகிலும் செய்யும் வேலை ஒன்றுமிராது.

16
בַּיּ֣וֹם -அந்த-நாளில் H3117
הַה֔וּא -அந்த H1931
יִהְיֶ֥ה ஆகும் H1961
מִצְרַ֖יִם எகிப்து H4714
כַּנָּשִׁ֑ים பெண்களைப்-போல H0802
וְחָרַ֣ד ׀ -மற்றும்-நடுங்கும் H2729

וּפָחַ֗ד -மற்றும்-பயப்படும் H6342
מִפְּנֵי֙ முகத்திலிருந்து H6440
תְּנוּפַ֣ת அசைவின் H8573
יַד־ கையின் H3027
יְהוָ֣ה யெகோவா H3068
צְבָא֔וֹת சேனைகளின்
אֲשֶׁר־ -அது

ה֖וּא அவர் H1931
מֵנִ֥יף அசைக்கிறார்
עָלָֽיו׃ அவன்-மீது

> அக்காலத்திலே எகிப்தியர்கள் பெண்களைப்போலிருந்து, சேனைகளின் யெகோவா தங்கள்மேல் அசைக்கும் கை அசைவினாலே பயந்து நடுங்குவார்கள்.

17
וְֽהָיְתָה֩ -மற்றும்-ஆகும் H1961
אַדְמַ֨ת நிலம் H0127
יְהוּדָ֤ה யூதாவின் H3063
לְמִצְרַ֙יִם֙ எகிப்துக்கு H4714
לְחָגָּ֔א திகிலுக்காக H2283
כֹּ֠ל எல்லோரும் H3605
אֲשֶׁ֨ר -அது

יַזְכִּ֤יר நினைவுக்கும் H2142
אֹתָהּ֙ அதை H0853
אֵלָ֣יו அவனுக்கு H0413
יִפְחָ֑ד பயப்படுவான் H6342
מִפְּנֵ֗י முகத்திலிருந்து H6440
עֲצַת֙ ஆலோசனையின் H6098

יְהוָ֣ה யெகோவா H3068
צְבָא֔וֹת சேனைகளின்
אֲשֶׁר־ -அது
ה֖וּא அவர் H1931
יוֹעֵ֥ץ ஆலோசிக்கிறார் H3289
עָלָֽיו׃ அவன்-மீது
ס —

> சேனைகளின் யெகோவா அவர்களுக்கு விரோதமாக தீர்மானித்துக்கொண்ட ஆலோசனையினால் யூதாவின் தேசம் எகிப்தியருக்குப் பயங்கரமாயிருக்கும்; தனக்குள் அதை நினைக்கிறவனெவனும் அதிர்ச்சியடைவான்.

18
בַּיּ֣וֹם -அந்த-நாளில் H3117
הַה֗וּא -அந்த H1931
יִהְי֞וּ ஆகும் H1961
חָמֵ֣שׁ ஐந்து H2568
עָרִ֗ים நகரங்கள்
בְּאֶ֣רֶץ நாட்டில் H0776
מִצְרַ֔יִם எகிப்தின் H4714
מְדַבְּרוֹת֙ பேசுகின்றன H1696
שְׂפַ֣ת மொழியை H8193
כְּנַ֔עַן கானானின்
וְנִשְׁבָּע֖וֹת -மற்றும்-ஆணையிடுகின்றன H7650
לַֽיהוָ֣ה யெகோவாவுக்கு H3068
צְבָא֑וֹת சேனைகளின்
עִ֣יר நகரம்
הַהֶ֔רֶס -அந்த-அழிவின் H2041
יֵאָמֵ֖ר சொல்லப்படும் H0559
לְאֶחָֽת׃ ஒன்றுக்கு H0259
ס —

அக்காலத்திலே எகிப்துதேசத்திலிருக்கும் ஐந்து பட்டணங்கள் கானான் மொழியைப் பேசி, சேனைகளின் யெகோவாவை முன்னிட்டு ஆணையிடும்; அவைகளில் ஒன்று அழிக்கப்பட்ட பட்டணம் என்னப்படும்.

19
בַּיּ֣וֹם -அந்த-நாளில் H3117
הַה֗וּא -அந்த H1931
יִֽהְיֶ֤ה ஆகும் H1961
מִזְבֵּ֙חַ֙ பலிபீடம் H4196
לַֽיהוָ֔ה யெகோவாவுக்கு H3068
בְּת֖וֹךְ நடுவில் H8432
אֶ֣רֶץ நாட்டின் H0776
מִצְרָ֑יִם எகிப்தின் H4714
וּמַצֵּבָ֥ה -மற்றும்-தூண் H4676
אֵֽצֶל־ அருகில் H0681
גְּבוּלָ֖הּ அதன்-எல்லையின் H1366
לַיהוָֽה׃ யெகோவாவுக்கு H3068

அக்காலத்திலே எகிப்து தேசத்தின் நடுவிலே யெகோவாவுக்கு ஒரு பலிபீடமும், அதின் எல்லையருகே யெகோவாவுக்கு ஒரு தூணும் உண்டாயிருக்கும்.

20
וְהָיָ֨ה -மற்றும்-ஆகும் H1961
לְא֥וֹת அடையாளமாக H0226
וּלְעֵ֛ד -மற்றும்-சாட்சியாக H5707
לַיהוָ֥ה யெகோவாவுக்கு H3068
צְבָא֖וֹת சேனைகளின்
בְּאֶ֣רֶץ நாட்டில் H0776
מִצְרָ֑יִם எகிப்தின் H4714
כִּֽי־ ஏனெனில்
יִצְעֲק֤וּ கதறுவார்கள் H6817
אֶל־ -க்கு H0413
יְהוָה֙ யெகோவாவிடம் H3068
מִפְּנֵ֣י முகத்திலிருந்து H6440
לֹֽחֲצִ֔ים ஒடுக்குபவர்களின் H3905
וְיִשְׁלַ֥ח -மற்றும்-அனுப்புவார் H7971
לָהֶ֛ם அவர்களுக்கு
מוֹשִׁ֥יעַ இரட்சகரை H3467
וָרָ֖ב -மற்றும்-போராளியை
וְהִצִּילָֽם׃ -மற்றும்-விடுவிப்பார்-அவர்களை H5337

அது எகிப்துதேசத்திலே சேனைகளின் யெகோவாவுக்கு அடையாளமும் சாட்சியுமாயிருக்கும்; ஒடுக்குகிறவர்களினால் அவர்கள் யெகோவாவை நோக்கிக் கூப்பிடுவார்கள்; அப்பொழுது அவர்களுக்கு ஒரு இரட்சகனையும், ஒரு பெலவானையும் அனுப்பி அவர்களை விடுவிப்பார்.

21
וְנוֹדַ֤ע -மற்றும்-அறியப்படுவார் H3045
יְהוָה֙ யெகோவா H3068
לְמִצְרַ֔יִם எகிப்துக்கு H4714
וְיָדְע֥וּ -மற்றும்-அறிவார்கள் H3045
מִצְרַ֛יִם எகிப்து H4714
אֶת־ -ஐ H0853
יְהוָ֖ה யெகோவாவை H3068
בַּיּ֣וֹם -அந்த-நாளில் H3117
הַה֑וּא -அந்த H1931
וְעָֽבְדוּ֙ -மற்றும்-ஆராதிப்பார்கள் H5647
זֶ֣בַח பலியால் H2077
וּמִנְחָ֔ה -மற்றும்-காணிக்கையால் H4503
וְנָֽדְרוּ־ -மற்றும்-நேர்வார்கள் H5087
נֵ֥דֶר நேர்ச்சையை H5088
לַיהוָ֖ה யெகோவாவுக்கு H3068
וְשִׁלֵּֽמוּ׃ -மற்றும்-நிறைவேற்றுவார்கள்

> அப்பொழுது யெகோவா எகிப்தியருக்கு அறியப்படுவார்; எகிப்தியர்கள் யெகோவாவை அக்காலத்திலே அறிந்து, அவருக்குப் பலிகளோடும், காணிக்கைகளோடும் ஆராதனைசெய்து, யெகோவாவுக்குப் பொருத்தனைகளைச் செய்து அவைகளைச் செலுத்துவார்கள்.

22

וְנָגַף -மற்றும்-அடிப்பார் H5062
יְהוָה யெகோவா H3068
אֶת־ -ஐ H0853
מִצְרַיִם எகிப்தை H4714
נָגֹף அடித்து H5062
וְרָפוֹא -மற்றும்-குணமாக்குவது H7495
וְשָׁבוּ -மற்றும்-திரும்புவார்கள் H7725
עַד־ வரை H5704
יְהוָה யெகோவாவிடம் H3068
וְנֶעְתַּר -மற்றும்-மன்றாடப்படுவார் H6279
לָהֶם அவர்களுக்கு
וּרְפָאָם׃ -மற்றும்-குணமாக்குவார்-அவர்களை H7495

> யெகோவா எகிப்தியரை வாதையினால் அடிப்பார்; அடித்து குணமாக்குவார்; அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்புவார்கள்; அப்பொழுது அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு, அவர்களைக் குணமாக்குவார்.

23

בַּיּוֹם -அந்த-நாளில் H3117
הַהוּא -அந்த H1931
תִּהְיֶה ஆகும் H1961
מְסִלָּה பெருவழி H4546
מִמִּצְרַיִם எகிப்திலிருந்து H4714
אַשּׁוּרָה அசீரியாவுக்கு H0804
וּבָא־ -மற்றும்-வருவான் H0935
אַשּׁוּר அசீரியா H0804
בְּמִצְרַיִם எகிப்தில் H4714
וּמִצְרַיִם -மற்றும்-எகிப்து H4714
בְּאַשּׁוּר அசீரியாவில் H0804
וְעָבְדוּ -மற்றும்-ஆராதிப்பார்கள் H5647
מִצְרַיִם எகிப்து H4714
אֶת־ -ஐ H0854
אַשּׁוּר׃ அசீரியாவோடு H0804
ס —

> அக்காலத்திலே எகிப்திலிருந்து அசீரியாவுக்குப் போகிற பெரும்பாதை உண்டாயிருக்கும்; அசீரியர்கள் எகிப்திற்கும், எகிப்தியர்கள் அசீரியாவுக்கும் வந்து, எகிப்தியர்கள் அசீரியருடன் ஆராதனை செய்வார்கள்.

24

בַּיּוֹם -அந்த-நாளில் H3117
הַהוּא -அந்த H1931
יִהְיֶה ஆகும் H1961
יִשְׂרָאֵל இஸ்ரவேல் H3478
שְׁלִישִׁיָּה மூன்றாவதாக H7992
לְמִצְרַיִם எகிப்தோடு H4714
וּלְאַשּׁוּר -மற்றும்-அசீரியாவோடு H0804
בְּרָכָה ஆசீர்வாதமாக H1293
בְּקֶרֶב நடுவில் H7130
הָאָרֶץ׃ -அந்த-பூமியின் H0776

> அக்காலத்திலே இஸ்ரவேல் எகிப்தோடும் அசீரியாவோடும் மூன்றாவதாக பூமியின் நடுவில் ஆசீர்வாதமாயிருக்கும்.

25

אֲשֶׁר -அது
בֵּרְכוֹ ஆசீர்வதித்தார் H1288
יְהוָה யெகோவா H3068
צְבָאוֹת சேனைகளின்
לֵאמֹר சொல்லி H0559
בָּרוּךְ ஆசீர்வதிக்கப்பட்டது H1288
עַמִּי என்-மக்கள்
מִצְרַיִם எகிப்து H4714
וּמַעֲשֵׂה -மற்றும்-செயல் H4639
יָדַי என்-கைகளின் H3027
אַשּׁוּר அசீரியா H0804
וְנַחֲלָתִי -மற்றும்-என்-உரிமை H5159
יִשְׂרָאֵל׃ இஸ்ரவேல் H3478
ס —

> அவர்களைக்குறித்துச் சேனைகளின் யெகோவா: எகிப்தியராகிய என் மக்களும், அசீரியராகிய என் கரத்தின் செயலும், இஸ்ரவேலராகிய என் சொத்தும் ஆசீர்வதிக்கப்பட்டது என்று சொல்லி, அவர்களை ஆசீர்வதிப்பார்.